02-08-2018

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No262 /2014

Deposition of Witness for Prosecution LW. PW.9
Defence
Court

Name : சக்கரவர்த்தி
Father's Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 2nd day of August – 2018.

முதல் விசாரணை:-

நான் வாழப்பாடி வட்டம் பழனியாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் போட்டோகிராபராக இருக்கறேன். நீதி மன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சி சொல்ல வந்தருக்கிறேன்., புகார்வாதியை எனக்கு தெரியும் . என்னிடம் காட்டப்படும் போட்டோக்களை நான்தான் எடுத்தேன். என்னுடைய ஸ்டுடியோ பெயர் மணி ஸ்டுடியோ. 15 வருடத்திற்கு முன்பாக போட்டோ எடுத்தேன். பொன்னம்மாளின் சகோதரர் பெரியசாமி என்னை போட்டோ எடுக்க அழைத்தார். அவருடன் சென்று அவர் காட்டிய இடத்தை போட்டோ எடுததேன். ( அ.த.சா.ஆ 6 -ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டது )

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கு காட்டப்பட்ட இடத்தில் தரையில் கிடக்கும் பொருட்களைத்தான் போட்டோ எடுத்தேன் என்றால் சரிதான். நான் போட்டோ எடுத்த இடத்தில் கட்டிடம் எதுவும் இல்லை

என்றால் சரிதான். நான் போட்டோ எடுத்தஇடம் யாருடையது என்று எனக்கு தெரியாது. போட்டோ எடுப்பதற்கு முன்பு எவ்வளவு நாட்களாக அவ்வாறு இருந்தது என்று எனக்கு தெரியாது.

Sd/-
III Additional District Judge, Salem.

02-08-2018

ஓ எஸ் 260/2015

பி.வா.சா.1 ரமேஷ்குமார்
பி.வா.சா.,1 சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி..

பெருமாள் கவுண்டர்மற்றும் ராமசாமி கவுண்டர் ஆகயோரின் பெண்வரிசுகள் திருமணமாகி அவரவர்கள் கணவர் வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி பெண் வாரிசுகளுக்கு பெருமாள் கவுண்டர் ராமசாமி கவுண்டரின் சொத்துக்களில் பாகம் இருந்தது என்றால் சரிதான் அதை நாங்கள் பிரித்து கொடுத்து விட்டு விடுதலை பத்திரம் எழுதி வாங்கிகொண்டோம். மேற்படி பெண் வாரிசுகளுககு கொடுத்தசொர்த்து விவரம் விடுதலை பத்திரம் ஆகிய சங்கதிகளைபொறுத்து என்னடைய பிராதிலோ மற்றும் இந்த எதிர்வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு சொத்து குறித்து கொடுக்கவில்லையென்றாரோ அவர்கள் விடுதலை பத்தரத் எழுத கொடுக்கவில்லையென்றாலோஅவர்களுக்கம் சொத்தில் உரிமை உள்ளது என்று சொன்னால் ஆம் சரிதான். என்னுடைய வழக்கிறேலா இற்தவசழக்கின் எதிரவ்ழக்குரையில பெருமாள் கவுண்டர் ராமசாமி கவுண்டரின் பெண் வாரிசுகள் குறறித்து சொல்லவில்லை.,வாதி தரப்பில் என் அப்பா மற்றும் அவருடைய சகோதரரிக்ளிடம் செய்து கொண்ட பாக் ப்பிரிவினை பத்திரத்தை தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான். இந்த வழகில்என் அத்தைகளுக்கு பிரிந்தது போக என் அப்பாவிற்கு சொத் து பிரிந்த சொத்தில்தான் வாதி பாகம்பிரிவினை கோரியுள்ளார்கள் என்றால் சரிதான். என் தாத்தா விற்ற சொத்து போக மீதியுள்ள சொத்தில் கேட்டுள்ளார்கள். நான் தாக்கல்செய்திருக்கும் அசல் வழக் எண் 254/16 ல் என் அத்தைகளுக்கு பாகம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல்செய்த வழக்கில்என் அத்தைகளுக்கும் பாகம் உள்ளதால் அவர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் விட்டுவிட்டதால் அவ்வழக்கு பாதிக்கப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல. என் அத்தைகளுக்கும் பாகம் கொடுக்கும்படி சட்டத்தில் இடம் இருந்தால் கொடுக்க தயாராக இருக்கிறேன். மேற்படி அவர்களுக்கு பாகம் கொடுக்க விருப்பம் இல்லை என்பதால் அவர்களை தரப்பனிர்களாக சேர்க்கவிலலையென்றால் சரியல்ல. 4 வது அயிட்ட சொத்தாக என்னடைய வழக்கில் காட்டியருக்கும் சொத்து என்று எதுவும் இல்லை என்றால் சரியல்ல. மற்ற அயிட்ட சொத்துக்களில் காட்டப்பட்ட சொத்தைதான் 4 வது அயிட்டமாக காட்டியிருக்கிறேன் என்றால் சரியல்ல. ஓ எஸ் 260/15 ல் தாவா சொர்துது நான்தாக்கல் செய்துள்ள ஓ எஸ் 254/2016 வழ்க்கின் சொத்து விவரத்தை காட்டியுள்ளீரா என்றால் அவ்வாறு காட்டப்பட்டவில்லை. இந்த வழக்கின் சொத்தும் சேர்ந்துள்ளது என்றும் சொல்கிறேன். என்னுடைய வழக்கில் நான் காட்டியிருக்கும் சொத்து பூஸ்துதியில் இல்லை என்றால் சரியல்ல.வாதிக்குசொத்தில்பங்கு கொடுக்ககூடாது என் அவசிய தரப்பினரை சோமதலும் தேவையற்ற தரப்பினரை சேர்த்தும் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படட பிறகு என்னுடைய வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய பெயரை ரமேஷ்குமார் என்று இவ்வழக்கில் திருத்தம் செய்வதற்கு எனக்கு எந்த ஆட்சேபமும்ம இல்லை. நான்தாக்கல் செய்த அசல் வழக்கு 254/16 தள்ளுபடியாகவேண்டும் என்றும் இந்த வழக்கு வாதிக் கஆதரவாக தீர்ப்பாகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Sd/-
III Additional District Judge, Salem.

ஓ எஸ் 254/16 வழக்கின் 5,12,13,14 பிரதிவாதிகள தரப்பு குறுக்கு விசாரணை

கு.வி.,

பெருமாள் கவுண்டரின் சகோதரிகள் யார் எத்தனை பேர் என்று எனக்க தெரியாது., பெருமாள் கவுண்டர் மற்றம் அவர்து சகோதரிகளுக்குமடையே பாகப்பிரிவினை ஆனதா என்று எனக்கு தெரியாது. ராமசாமிகவுண்டரின் உடன் பிறந்த சகோதரி சரஸ்வதி, மாணிக்கம்மாள், சாரதாம்பாள் ஆகியோர்கள். ராமசாமி கவுண்டர்ஆவணங்கள் எழுதி வைக்காமல் இறந்து விட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. அவ்வாறு மேற்படியார்களை தரப்பினர்களா சேர்ககாமல் என்னுடைய வழக்கு தாக்கல் செய்ததற்கு காரணம் உள்ளதா என்றால் விடுதலை பத்திரம எழுதி கொடுத்ததால்சேர்க்கவிலலை. என் அப்பாவின் சகோதரிகளை தரப்பினர்களாக சேர்க்கவில்லை. நான் ததாக்கல் செய்த அசல் வழக்கு 254/16 ல் முதல் அயிட்ட சொத்து யாரிடடிமருந்து வாங்கியது என்று எனக்கு தெரியாது என் தாத்தா வாங்கினார். பூர்வீக சொத்து ஆகும்., அதற்குரிய ஆவணங்களை தாக்கல்செய்திருக்கிறேன். என்னுடைய வழக்கில் காட்டப்பட்டுள்ள வெசாத்து விவரத்தில் ஒவ்வொரு அயிட்ட சொத்தின் விஸ்திரணத்தைசொல்ல முடியாது அதே போல் 2,3 அயிட்ட சொத்தின் வீஸதீரணத்தை சொல்ல முடியாது. நான் சொல்லயிருக்கும் குழி அளவு மற்றும் வேறு சொத்துக்களின் அளவு நான் தனியாக காட்டவில்லை. 4 வது அயிட்ட சொத்துக்குண்டான பத்திரங்கள் தாக்கல் செய்திருக்கிறீரா என்றால் அதுவும் பூர்வீக சொத்துதான் அதற்கான ஆவணம் உள்ளது. 5 வது அயிட்ட சொத்து யாரிடமிருந்து வாங்கியது என்ாறல் அது பூர்வீக சொத்து . 5 வது அயிட்ட சொத்து பூஸ்துதியில் இல்லை என்றும் மாநகராட்சி ஆன பிறகு மேற்படி சொத்துக்கள் அனைத்தும் ஒன்றாக சேர்க்கப்பட்டுள்ளது. நான் கொடுத்தருக்கும் தனித்தனியான சொத்து விவரம் தவறானது என்றால் சரியல்ல. ராமசாமி கவுண்டரின் மூத்த சகோதரரி பெயர் பொன்னம்மாள் என்றால் அது எனக்கு தெரியாது., நாங்கள் சொத்து சம்மந்தமாக பஞ்சாயத்து எதுவும் செய்ய்வில்லை. 10 ,84 ஏக்கரில் எத்தனை பாகமாக பிரிந்தது என்றால் முழு சொத்தும் எங்களுடையதுஎன்று சொல்கிறேன். ் என்னுடைய வழக்கில் 10 ஏக்கர் 84 சென்டில் மீதியுள்ள 2/3 பங்கு போக மீதி நிலம் எங்களுடையது என்று சொல்லியிருப்பது சரியா என்றால் அது தவறு. மொத்த நிலமும் என்னுடையதுதுான் என்றுசொல்கிறேன். 2/3 பங்கு போக மீதியுளள நிலத்தில் 1/3 பங்கு அப்பாகவுண்டர் மற்றும் 1/3 பங்கு ராமகவுண்டர் ஆகியோருக்கு பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அப்பாகவுண்டருக்கு பிரிந்த 3/1 பங்கு பொறுத்து அவருடைய குடும்பத்தார் விற்பனை செய்து விட்டார்கள் என்று சொன்னால் அதை பொறுத்து எனக்கு தெரியாது. மேற்படி அப்பாவு கவுண்டருக்கு பிரிந்த சொத்தை ததான் , 5,12,13,14 பிரதிவாதிகள் கிரையம் வாங்கியிருக்கிறார்கள் என்று

சொன்னால் சரியல்ல. அவர்கள் தவறாக விற்று விட்டார்கள் என்று நான் சொல்கிறேன். 1935 ல் பாகம் பிரிந்து பிரிவினையான விவரம் எனக்கு தற்போதுதான் இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு தெரிய வந்தது. நான் சொல்லியிரக்கும் மூன்று ஆவணங்களான டாக்குமெண்ட் எண்கள் 474/96, 475/96, 476/96 படி 5,12,13,14,பிரதிவாதிகள் கிரையம் பெற்றிருக்கிறார்கள் என்றும் அந்த கிரையம் என்னை கட்டுப்படுத்தும என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கிரையட்ம பெற்ற பிறகுமேற்படி பிரதிவாதிகள் வருவாய்துறை ஆவிணங்களை பெயர் மாற்றம்செய்து கொண்டார்கள் என்று சொன்ானல் அது எனக்கு தெரியாது.,12,13,14 பிரதிவாதிகள் கிரயைம் பெற்ற நிலத்திற்கும் எங்களுடைய நிலத்திற்கும் இடையே 9 அடி அகலட்ம வண்டி பாதை உள்ளது என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதிகள் கிரயம்பெற்ற சொத்துக்கள் வேறு என்றும் என்னடை யசொத்துக்கள் மூதாதையர்கள் என்றும் ஆகவே இரண்டும் வெவ்வேறு சொத்துக்கள் என்பதால் அதனையும் சேர்த்து நான் பரிகாரம் கோருவது சரியானதல்ல என்றால் தவறு. மேற்படி 12,13,14 பிரதிவாதிகள் அவர்களுடைய சொத்துக்களை சுற்றி வேலி போடும்போது நான் தடுத்து நிறுத்திஅன்னதானப்பட்டி கா.நி. புகார் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். போலிசார் எங்களுக்கு சாதகமாக விசாரிக்கவில்லை என்ற காரணத்தால் நில அபகரிப்பு சட்டத்தின் மூலும் நடவடிக்கை எடுத்தேன் என்ாறல் சரிதான். மேற்படி இரண்டு நடவடிக்கைகளும் எனக்க சாதகமாக அமையவில்லையென்பதால் நான் ஓ எஸ் 254/16 வழக்கில் 12,13,14 பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்த்து விட்டேன் என்றால் சரியல்ல.ஓ எஸ் 260/15 வழக்கை என் சகோதரட்ர பாகம் கோரி தாக்கல் செய்துள்ள நிலையில் அதிலேயே தரப்பினராக சேர்த்துகொள்ளாமல் நாட்ன அதே சொத்தின்பேரில் அசல் வழக்கு 254/16 பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்திருப்பது சட்டப்படியானதல்ால என்றால் சரியல்ல. நான் சொல்லும் பெருமாள் கவுண்டர் வேறு மச்சினன் முறையில் வரும் பெருமாள் கவுண்டர் என்பது வேறு என்று சொன்னால் சரிதான். ஓ எஸ் 260/15 ல்கோரியவாறு எனக்கு ஒரு ஏக்கர் 40 செண்ட்டில்தான் பாகம் உள்ளது என்றும் நான் தாக்கல் செய்திருக்கும் வழக்கு எனக்கு பரிகாரம் எதுவும் கிடைக்கக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. ஆகவே என்னுடைய வழக்கு ஓ எஸ்254/16 வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்றும் இவவழக்கு தீர்ப்பாகவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-
III Additional District Judge, Salem.

02-08-2018

ஓ எஸ் 163 /2004

வா.சா 1 சதிஸ்குமார்

வா.சா., 1 மனுவின் பேரில் திரும்ப அழைக்க்பபட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதன்மை விசாரணை தொடரப்படுகிறார்.

முதன்மை விசாரணை தொடர்ச்சி..

நான் 2005 ல் முதன்மை விசாரணை செய்த பிறகு 1 ம் பிரதி வாதி வீரன் இறந்து விட்டதால் அவர்களுடைய வாரிசுகள் தரப்பினராக சேர்க்கப்பட்ட பிறகு வீரனின் பூர்வீக சொத்துக்கள் என்றுசொல்லப்பட்டுள்ளதால் அதனை மறுக்கும்பொருட்டு தற்போது என்னிடம் கிடைக்க்பெற்ற ஆவணங்களை கொண்டு அச்சொத்துக்கள் வீரனின்சுயராஜ்ஜித சொத்துக்கள் என்பதை காட்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

வீரன் 3-3-1989 ல் கிரையம் பெற்ற ரவி அர்த்தனாரி என்பவரிடமிருந்து கிரையம்பெற்ற கிரையப்த்திரன் நகல் வா.சா.ஆ 9

வீரன் 6-3-1989 தேதியிட்ட ரவி அர்த்தனாரியிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தன் நகல் வா.சா. அ 10

ஒரு சுப்பரமணி என்பவரிடமிருந்து 13-7-1989 தேதிய கிரைய பத்திரத்தன் சான்றிட்ட நபல் வா.,சா-ஆ 11

13-7-1989 தேதியில் ராமபோயன் என்பவரிடமிருந்து வீரன் கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா-ஆ 12

23-5-1993 தேதியில் ஒரு ஆறுமுகம் என்பவரிடடிமருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரத்திட்ன சான்றிட்ட நகல் வா.சா.ஆ 13

25-2-1993 ல் அதே ஆறுமுகம் என்பவரிமிருந்து துகிரையம் பெற்ற கிரைய பத்திரத்திட்ன சான்றிட்ட நகல் வா.சா.ஆ 14

6-6-1994 ல் மாரி சாம்பாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ 15

18-7-2007 தாவா சொத்தைபொறுத்து பொன்னுசாமி மற்றும் ஒருவர் குமார் வகையறாவுடன் செய்துகொண்ட கிரை யஒப்பந்த பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.,ஆ 16

13-12-2007 ல் கே எஸ் சதிஸ்குமார் அவரது தாயார் பத்மாவதி ஆகியோருடன் ஏற்படுத்திக்கொண்ட கிரை யஒப்பந்த பத்திரம் சான்றிட்ட நகல் 17

13-12-2007 ல் வா.சா.ஆ 16 ஐ ரத்து செய்து ஏற்படுத்தி கொண்ட கிரைய ஒப்பந்த ரத்து பத்திரம் வா.சா.ஆ 18,

கே எஸ் சதிஸ்குமாரும் பத்மாவதியும் மற்றும வீரன் ஆகியோருக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ 19

அதை அவர்களுக்கு அனுப்பியதற்கானபோஸ்டல் ரசீது  வா.சா-ஆ 20 .

கே எ்ஸ் சதிஸ்குமார் பெற்றுக்கொண்ட அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா ஆ 21

பத்மாவதி பெற்றுக்கொண்ட அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா ஆ 22

வீரன் பெற்றுக்கொண்ட அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா ஆ 23

தாவாபடி தீர்ப்பாகவேண்டுகிறேன்.

Sd/-

III Additional District Judge, Salem.

02-8-2018

ஓ எஸ் 221/13

வா.சா. 1 ஸ்ரீ வெங்கடேஷ்ராஜ்

வா.சா. 1 சத்திய பிரமாணம்செய்விக்கப்பட்டு 2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி..

தாவா 1 ம் அயிட்ட சொத்து பூர்வீக சொத்தைவிற்றுவாங்கியதாக காட்டுவதற்குதான் வா.சா-ஆ 14.15,16 ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறேன் என்ாறல் சரிதான்.தாவா 1 ம் அயிட்ட சொத்தை 1971 ல் வாங்கிவிட்டார்கள் என்றும் ஆனால் நான் தாக்கல்செய்திருக்கும் வா.சா.ஆ,15,16 ஆவணங்கள் 1972 மற்றும் 1981 ல் ஏற்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல முன்பே கிரயதொகை பெற்றுக்கொண்டு அதன்பிறகு கிரையம் செய்தார்கள் என்றுசொல்கிறேன். வா.சா. ஆ 14 ன்படி என் தாத்தா வெங்கடாஜலம் அவருடைய சொத்தை விற்று அவரது அத்தைக்கு சொத்து வாங்கியிருக்கிறார் என்றும் 1 ம் அயிட்ட சொத்தை கிரையம் வாங்கவில்லை என்றுசொன்னால் சரியல்ல. 1971 ல் என் தாத்தாவும் என் அப்பாவும் மற்றும் பெரியப்பாவும் 1 ம் அயிட்ட சொத்தை வாங்கியபிறகு அதே சொத்தை கிரையம் கொடுத்தவர்களிடமே குதவை வைத்து விட்டாட்ரகள் என் றுசொன்னால் சரிதான். 1989 ம் ஆண்டு வரை என் தாத்தா அந்ததொகைக்கான வட்டியை செலுத்தி வத்நாட்ர என்றம் அதன்பிறகுஅவரால் கட்ட முடியாததால் குதவைதாரர்கள் சங்ககிரி முன்சீப் கோர்ட்டில் அவர்கள் வழக்கு தொடர்ந்தாட்ரகள் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் மேற்படி பூர்வீக சொத்தை விற்று 1 ம் அயட்டசொத்தை வாங்கியிருந்தால் விற்ற சொத்தை அவர்களிடமே அடமானம் வைத்திருக்கவேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் சரியல்ல. பூர்வீக சொத்தை விற்ற தொகை கிரையம் பெற போதுமானதாக இல்லை என்பதால் அந்த சொத்தை அவர்களிடமே அடமானம் வைத்தார்கள். மேற்படி சங்கதியை என்னுடைய பிராதிலோ பிரமாண பத்திரிக்கையிலோ சொல்லியிருக்கிறீரா என்றால் சொல்லவில்லை. நான் 1976 ல் பிறந்தேன். மேற்படி பூர்வீக சொத்தைவிற்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என் தாயார் சொல்லிதான் தெரியும் இதை குறித்து நான் பிராதில் சொல்லவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. என் தாத்தாவும் பெரியப்பாவும் சேர்ந்து வாங்கிய சொத்தில் என் பெரியப்பா இறந்த பிறகு என் தாத்தா , பாட்டி,பெரியப்பாவின் மனைவி, ஆகியோருக்கு அச்சொத்தில் பாகம் உள்ளது என்றால் சரிதான். என் தாத்தா மற்றும் என் பெரியப்பா வாங்கி யமொத்த விஸ்தீரணம் 6 ஏக்கர் 91 சென்டில் என் பெரியப்பாவிற்கு 3.45 1/2 ம் என்னுடைய தாத்தாவிற்கு 3.45 1/2 ம் பாகம் ஏற்படுகிறது. என் அப்பாிவும் என் தாத்தாகவும் வாங்கய 6 ஏக்கர் 91 சென்டில் அதேபோல் என் அப்பாவிற்கும் என் தாத்தாவிற்கும் தலா 3.45 1/2 பாகம் ஏற்படுகிறது .என் தாத்தாவிற்கு இரண்டு

கிரையங்கள் மூலமாக மொத்தம் 6.91 வருகிறது. என் பெரியப்பா இறந்த பிறகு அவருடைய மனைவி அவருக்கு வருட்ம பங்கினை பொறுத்துஎன் அப்பாவிற்கும் என் தாத்தாவிற்கும் விடுதலை பத்திரம் எழுதி கொடுத்து விட்டார் என்று சொன்னால் சரிதான். என் பெரியப்பாவின் மனைவி அவருடைய பங்கை பொறத்து என் அப்பாவிற்கும் என்தாத்தாவிற்கும் எழுதி கொடுத்த சொதது போக ஒரு ஏக்கர் 73 செண்ட் நிலம் என் அப்பாவிற்கும் என் தாத்தாவிற்கும் பாத்தியப்பட்டது என் றசொன்னால் சரியல்ல என் பாட்டிக்கும் இறந்து போன என் பெரியப்பாவின் வாரிசு என்ற அடிப்படைளியல் பங்கு உள்ளது என்றுநான் சொல்கிறேன். என் தாத்தாவிற்கு ஏற்கனவே 6.91 ஏக்கர் உள்ள நிலையில் என் பெரியம்மா எழுதி கொடுத்த பங்கு 1.73 பங்கும் சேர்த்து 8.64 பாத்தியம் என்று சொன்னால் சரிதான்., என் அப்பாவிற்கு ஏற்கனவே உள்ள 3.45 1/2 உடன் என் பெரியம்மான் எழுதி கொடுத்த 1.73 சேர்த்து 5.17 என்றால் சரிதான். என் தாத்தா 2001 ல் இறந்துவிட்டார். என் தாத்தா எந்த ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்து விடடார். அவர்இறக்கும்போது அவரது வாரிசுகளாக அவரது மனைவி முத்தாயி, அவரது மகனான என் தகப்பனார் கந்தசாமி மற்றும் அவருடைய மகள் வேலாயி ஆகியோட்ரகள் வாரிசுகள் என்றால் சரிதான். என் தாத்தர்விற்கு பாத்தியப்பட்ட 8.64 ஏக்கர் மேற்படி வாரிசுகளுக்கு சத பங்கு உளளது என்றால சரிதான். அதனை பிரித்தால் ஒவ்வொருக்கும்தலா 2.88 வருகிறது என்றால் சரிதான். என் அப்பாவிற்கு ஏற்கனவே உள்ள 5,17 ஏக்கருடன் மேற்படி 2.88 ஏககர் சேர்ந்துள்ளது மொத்தம் 8 ஏக்கர் 5 செண்ட் வருகிறது என்றால் சரிதான். 2 வது அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1.74 செண்ட் என்று பிராதில் சொல்லியிருக்கிறேன். மேற்படி சொத்தற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. எங்களிடம் ஆவணங்கள் எதுவும் இல்லை. 2 ம் அயிட்டசொத்தில் என் அப்பா,பாட்டி, மற்றும் அத்தைக்கு தலா 24 செண்ட் பாத்தயம் உள்ளது என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு மொத்தம் 8,5 உடன் மேலே கண்ட 24 செண்ட்டும்சேர்ந்தால் 8 ஏக்கர் 29 செண்ட் பாத்தியம் ஏற்படுகிறது எ்ன்றுசொன்னால் சரிதான். அதேபோல் என் பாட்டி வேலாயிக்கு 3.12 செண்ட்டும் என் அத்தை வேலாயிக்கு 3.12 செண்ட்டும் வருகிறது என்று சொன்னால் சரிதான். 27-1-2011 ல் என் பாட்டி முத்தாயி அவருடைய பாகத்தை எனக்கு கரையம் கொடுத்து விட்டார், அது வா.சா.ஆ 4 அதன்படி எனக்கு எவவளவு வீஸ்தீரணம் என்ன என்று சொன்னால் அந்த பத்திரத்தல் விஸ்தீரணம் கண்டு எழுதப்படவில்லை. பொதுவில் கண்டுதான் எழுதப்பட்டுள்ளது., மேற்படி வா.சா.ஆ 4 பக்கம் 9 ல் சர்வே நெ. 433/1 ல் உள்ள 60 1/2 செண்ட் மதிப்பு 79,625/- என காட்டப்பட்டுள்ளதா என்றால் ஆம் காட்டப்பட்டுள்ளது., அதேபோல் சர்வே நெ, 433/1 ல் 89 செண்ட் மதிப்பீடு ரூ 1,17,000 என்று காட்டப்பட்டுள்ளதா என்றால் ஆம் அவ்வாறுதான்

காட்டப்பட்டுள்ளது., சர்வே நெ. 433/2 ல் விஸ்தீரணம் 1 ஏக்கர் 70 சென்ட் என்று காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். சர்வே எண் 433/2 ல் 2,54 சென்ட் என்றால் சரதான். அதில் மொத்தம் 5 ஏக்கர் 73 1/2 சென்ட் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மொத்த மதிப்பீடு 5,86,500/- என்றால் சரிதான். மேற்படி கிரையம் யார் யாருக்கு தெரியும் என்றால் என் பாட்டி , சாட்சி கையெழுத்து போர்ட்டவர்கள் , மற்றும் என் அத்தைக்கும் தெரியும். என் அப்பாவிற்கும் என் தம்பிக்கும் மேற்படி கிரையம்குறித்துதெரியாது. என் பாட்டி எனக்குனு கிரயம் கொடுக்கும்போதுஅவருக்கு மேற்படி சொத்து பாத்தியப்பட்டதாக பாகப்பிரிவினை பத்திரம் எதுவும் இல்லை. என் பாட்டி எனக்கு கிரையம் கொடுக்கும்போது அவருக்கு வயுது 80 இருக்கும். நான் என் அத்தை என் பாட்டி ஆகியோர் விலைட பேசினோம். என் அத்தைக்கு அப்பொழுதுவயது 55 இருக்கும். என் பாட்டிக்கு கிரைய தொகையை சார் பதிவாளர் அலுவலகத்தல் வைத்து கொடுத்தேன். நான் மளிகை கடை வைத்திருக்கிறேன். நான் வருமான வரி கட்டுவதில்லை. மேற்படி தொகையை என் மாமனார் எனக்கு கொடுத்தார். அந்ததொகையை என் பாட்டி வாங்கி அவரது மகள் வேலாயிக்கு கொடுதுது விட்டார். மேற்படி கிரைய சொத்தின் மதிப்பீடு கைடு லைன் மதிப்பீட்டின்படி மதிப்பிடப்பட்டது. மேற்படி கிரைய ஆவணம் வா.,சா.ஆ 4 பொய்யான ஆவணம் என்றால் சரியல்ல. என் பாட்டி என்னிடம் விலை பேசியதாகவும் நான் கிரைய தொகை கொடுத்ததாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் பாட்டிக்கு பாகப்படி 2 ஏக்கர் 88 சென்ட் தான் பாத்தியப்பட்டது என்றும் அதற்கும் மேல் சொத்தைகிரையம்செய்து கொடுக்க அவருக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. என் பாட்டி அவருடைய பெரிய மகன் இறந்து விட்டதால் அவரது வாரிசுரிமை என்ற அடிப்படையிலும், அவருடைய கணவரின் வாரிசுரிமைப்படியும் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை எனக்கு எழுதி கொடுத்தார். என் அத்தைவேலாயி எனக்கு 23-3-2011 ம் தேதியில் சொத்தை கிரையம் கொடுத்துள்ளார். அது 6 லட்சம் ஆகும். அது வா.சா-ஆ 5 ஆகும். அதன் விஸ்தீரணம் தகப்பனாரின் சொத்தில் 1/3 பங்கை பொறுத்து எழுதி கொடுத்தார் விஸ்தீரணம் 3 ஏக்கர். என் அத்தையிடமும் நான் ஏமாற்றி கிரையம் வாங்கியிருக்கினறேன் என்றால் சரியல்ல. நான் அவருக்கு கிரைய தொகை கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. முத்தாயியும் வேலாயியும் அவரிடம் மோசடியாக கிரையம் பெற்றதாக கூறி இவ்வழக்கில்தங்களையும் தரப்பினராக சேர்க்கும்படி மனுதாக்கல் செய்திருக்கிறார்களா என்றால் ஆம் அவ்வாறுதான் சொல்லி மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். ஆனால் மேற்படி மனுவில் சொல்லியிருக்கும் விவரங்கள் தவறானவை என்றுசொல்கிறேன். அம்மனு அனுமதிக்கப்பட்டுஇவ்வழக்கில் இருவரும் தரப்பினராக சேர்க்கப்பட்டார்கள். அந்த மனு உத்தரவின்பேரில்மேல்முறையிடு

எதுவும் செய்யவில்லை. மேற்படி மனுவில் சொல்லியிருக்கும் சங்கதிகள் உண்மையானவையல்ல என்பதாலதான் மேல் முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல.

Sd/-
III Additional District Judge, Salem.

02-08-2018

ஓ எஸ் 305/2016

பி.வா.சா 1 கந்தசாமி

பி,வ,ச, 1 சத்தியபிரமாணம்செய்விக்கப்பட்டு 2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை..

வழக்கின் 2 ம் பிரதிவாதி என் மனைவி என்றால் சரிதான். வாதி என் ஒரே மகள். வாதி என்னுடைய ஒரே வாரிசு 2 ம் பிரதிவாதி தரப்பு எதிர் வழக்குரையை படித்து பார்த்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என் மனைவியின் எதிர் வழக்குரை சரிதான். எனக்கும் 2 ம் பிரதிவாதிக்கம் எப்போது திருமணம் ஆனது என்றால் 1981 ல் நல்லபடியாக திருமணம் ஆனது. எங்கள் திருமணத்திற்கு பிறகு நானும் 2 ம் பிரதிவாதியும் கணவன் மனைவியாக ஒரே வீட்டில்தான் குடியிருக்கிறோம். என் மகளுக்கு திருமணமானதிலிருந்து எனக்கும் என் மனைவிக்கும் கருத்து வேறுபாடு உள்ளது. என் மனைவிக்கு என்னுடைய சொத்தில் எவ்விதமான உரிமையும் இல்லையென்றால் சரிதான். என் மனைவி எழுத படிக்க தெரியாதவர் என்றால் சரியல்ல. வீட்டு மனைவிதான் .

Sd/-
III Additional District Judge, Salem.